



# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

## மானியக் கோரிக்கை எண் – 26

## அறிவிப்புகள்
## 2023 – 2024

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

### மானியக் கோரிக்கை எண் – 26

# அறிவிப்புகள் 2023 – 2024


**தா.மோ.அன்பரசன்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

# வீட்டுவசதி மற்றும்
# நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 11 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**தா.மோ.அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்
நிறுவனங்கள் துறை அமைச்சர்

**1. நடப்பு நிதியாண்டில் நில உரிமையுள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற பயனாளிகளுக்கு தாமாகவே வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1,10,000 தனி வீடுகள் கட்டப்படும்.**

நில உரிமையுள்ள, பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கு தாமாக வீடு கட்டிக் கொள்ள ரூ.2.10 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநகரங்கள், நகரங்கள் மற்றும் பேரூராட்சிகளில் தனி வீடுகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2023-24ஆம் ஆண்டு இத்திட்டத்தின்படி 1,10,000 தனி வீடுகள் புதிதாகக் கட்டப்படும்.

**2. நகர்ப்புறங்களில் வாழும் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இந்த நிதியாண்டில் 30,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர்ப்புற ஏழை மக்களுக்காக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு தகுதியான நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

2023-24ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் 30,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. பெரும்பாக்கம் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதியில் ரூ.7.00 கோடி திட்ட மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் 21,528 அடுக்குமாடிக் குடியிருப்புகள் (G + 7) கட்டப்பட்டு குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். மேலும், கூடுதலாக 3,132 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

இப்பகுதிவாழ் குடும்பங்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களது குடும்ப விழாக்களை அவர்கள் வாழும் திட்டப்பகுதியிலேயே சிரமமின்றி நடத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் தரை மற்றும் முதல் தளத்துடன் (G + 1) ரூ.7.00 கோடி திட்ட மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டப்படும்.

**4. பெரும்பாக்கம் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ள குடும்பங்கள் பயன் பெறும் வகையில் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கூடுதல் குடிநீர்த் தொட்டி அமைக்கப்படும்.**

பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்கள் பயன் பெறும் வகையில், ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கூடுதல் குடிநீர்த் தொட்டி அமைக்கப்படும்.

**5. பெரும்பாக்கம் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவருடன் கூடிய விளையாட்டு மைதானம் கட்டப்படும்.**

பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவருடன் கூடிய விளையாட்டு மைதானம் கட்டப்படும்.

## 6. மறுகுடியமர்வு செய்யப்பட்ட கண்ணகி நகர் திட்டப்பகுதியில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் நவீன நூலகம் கட்டப்படும்.

மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு பயனுள்ள வகையில் கண்ணகி நகர் திட்டப்பகுதியில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் நவீன நூலகம் கட்டப்படும்.

**7. மறுகுடியமர்வு செய்யப்பட்ட நாவலூர் திட்டப்பகுதியிலுள்ள குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் மற்றும் அப்பகுதியில் இயங்கி வரும் ஆரம்பப் பள்ளியில் கூடுதல் தளம் கட்டப்படும்.**

மறுகுடியமர்வு செய்யப்பட்ட நாவலூர் திட்டப்பகுதியிலுள்ள குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் மற்றும் அப்பகுதியில் இயங்கி வரும் ஆரம்பப் பள்ளியில் கூடுதல் தளம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**8. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டப்பகுதிகளில் உள்ள மனைகளில் வசித்து வரும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் மேம்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள மனைகளில் வசித்து வரும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் பெறுவதில் உள்ள சிரமங்களை களையும் விதமாக அப்பகுதிகளில் தொடர்ந்து 10 ஆண்டுகள் வசித்து வரும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

**9. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் 4 மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்திலும் திட்டப்பகுதிகளின் பராமரிப்புப் பணிகளை நல்லமுறையில் மேற்கொண்டு திட்டப்பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி சிறப்பாக செயல்படும் முதல் மூன்று குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு முறையே ரூ.1,00,000, ரூ.50,000 மற்றும் ரூ.25,000 ஊக்கத் தொகை வழங்கப்படும்.**

சென்னை மற்றும் இதர நகரங்களில் கட்டப்பட்ட 1.78 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படுகின்றன.

குடியிருப்போர் நலச்சங்கங்களால் வசூலிக்கப்படும் உரிய பராமரிப்புத் தொகைக்கு இணையான மானியம் அரசால் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு

வழங்கப்படுகிறது. குடியிருப்போர் நலச்சங்கங்கள் பதிவு செய்வதற்கு செலுத்த வேண்டிய பதிவு கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டு பதிவு செய்த கட்டணம் திருப்பி அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் 4 மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்திலும் திட்டப்பகுதிகளின் பராமரிப்புப் பணிகளை நல்லமுறையில் மேற்கொண்டு திட்டப்பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி சிறப்பாக செயல்படும் முதல் மூன்று குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு முறையே ரூ.1,00,000, ரூ.50,000 மற்றும் ரூ.25,000 ஊக்கத் தொகை வழங்கப்படும்.

**10. வாரிய குடியிருப்புகளில் வாழும் இளைஞர்களின் திறன்களை ஊக்குவித்து, அவர்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தும் பொருட்டு திட்டப்பகுதிகளில் இளைஞர் மன்றங்கள் அமைக்கப்படும்**

இளைஞர்களின் சமுதாயப் பங்களிப்பு மற்றும் ஆளுமைத் திறனை அதிகரிக்கவும், இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 2023–24 ஆம் ஆண்டு வாரிய திட்டப்பகுதிகளில் இளைஞர் மன்றங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி ஒரு குடியிருப்புப் பகுதிக்கு ஒரு இளைஞர் மன்றம் வீதம் 393 இளைஞர் மன்றங்கள் அமைக்கப்படும்.

மேலும், வாரிய குடியிருப்புகளில் வாழும் இளைஞர்களின் திறன்களை ஊக்குவித்து, அவர்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தும் பொருட்டு வேலைவாய்ப்புக்கான பயிற்சிகள் உரிய பயிற்சியாளர்களைக் கொண்டு ஒவ்வொரு திட்டப்பகுதிகளிலும் சுழற்சி முறையில் அளிக்கப்படும்.

## 11. வாரிய திட்டப்பகுதிகளில் வாழும் 12,000 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கி வேலை வாய்ப்புகள் பெற ஊக்குவிக்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் இளைஞர்களின் கல்வி தகுதிக்கேற்ப திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலமாக 12,000 இளைஞர்கள் பயன்பெறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு, வேலை வாய்ப்புகள் பெற ஊக்குவிக்கப்படும்.


தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NADU